**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 428/2010**

நாள்: 04.07.2026.

பெயர்: ராஜசேகர் (பி.வா.சா.1) த/பெ: ராமசந்திரன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை...**

1) நான் என்ன படித்துள்ளேன், என்ன வேலை செய்கிறேன் என்றால் உயிர் வேதியியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றுள்ளேன், தனியார் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் பிறந்தது முதலே கரடிகுளம் கிராமத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் தனிப்பட்ட முறையில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது குடும்பத்தினர் அனைவரின் சார்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தை தவிர மற்ற சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். 1992 ல் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் இல்லை. தாவா சொத்துக்களை தவிர்த்து மற்ற சொத்துக்களை எப்போது வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் ஞாபகம் இல்லை. 1992 ஏப்ரல் மாதத்தில் பக்கிரிசாமி, ராமசந்திரன், பாலசுப்ரமணியன் ஆகியோர் பாக ஒப்பந்தம் செய்துக் கொண்டார்கள் என்றால் ஞாபகம் இல்லை. 1992 ஏப்ரல் மாதத்திற்கு முன்பு வாய்மொழியாக பிரித்து அனுபவித்து வந்த சொத்துக்களை 14.04.1992 ல் பக்கிரிசாமி, ராமசந்திரன், பாலசுப்ரமணியன் ஆகியோர்கள் தனித்தனியாக பாக ஒப்பந்த ஆவணம் எழுதிக்கொண்டார்கள் என்றால் அவ்வாறான ஒப்பந்தம் ஏதும் போடவில்லை.

2) நான் தாக்கல் செய்து முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் 7 வது பத்தியில் *மேற்படி சொத்தை 1992 ஆம் வருடம் ஏற்பட்ட பாக ஒப்பந்தத்தின்படி வாதியும், 1,2 பிரதிவாதிகளும் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை* என்று சொல்லியுள்ளதில் 1992 ஆம் வருடம் பாக ஒப்பந்தம் உள்ளதாக தெரிகிறது என்றால் பாக ஒப்பந்தம் உள்ளது, அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்னர் தான் நான் பார்த்தேன். இவ்வழக்கை தாக்கல் செய்த போது எனது தந்தை 1ம்

பிரதிவாதி உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். எனது தந்தையும் பாக ஒப்பந்தத்தை மறுக்கவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 14.04.1992 ல் பாகஸ்தர்கள் கூடி பேசி பாக ஒப்பந்த ஆவணம் ஏற்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது தந்தை தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகளை தான் நானும் எனது எதிர்வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 14.04.1992 ல் பாக ஒப்பந்தம் ஏற்பட்டு அதன்படி தாவா சொத்திற்கு ஈடாக வேறு சொத்தை கொடுக்காததால் தாவா சொத்தை விட்டுக்கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1992 பாக ஒப்பந்தம் படி எங்களுக்கு ஈடாக கொடுக்க ஒப்புக்கொண்ட சொத்து தாவா சொத்துக்களுக்கு நேர் எதிர்புறம் ரோட்டிற்கு கீழ்புறம் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை.

3) 14.04.1992 பாக ஒப்பந்தப்படி தாவா சொத்திற்கு ஈடாக தாவா சொத்திற்கு நேர் கீழ்புறமுள்ள சர்வே எண்.81/54 ல் சொத்து விட்டுக்கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 81/57A ஆகும். சர்வே எண்.81/57A க்கு தென்புறம் சர்வே எண்.81/57B சொத்து வாதி குணசேகரன் வீடு என்றால் சரிதான். குணசேகரன் வீட்டிற்கு தென்புறம் பாலசுப்ரமணியன் மற்றும் எனது தந்தையின் வீடு உள்ளது என்றால் சரிதான். வாதி வீட்டிற்கு மேல்புறம் அன்பழகன் வீடும், அன்பழகன் வீட்டிற்கு மேல்புறம் முத்துகுமரன் வீடும் உள்ளது என்றால் சரிதான். எனது தந்தை 1ம் பிரதிவாதியும், பாலசுப்ரமணியனும் சின்னதம்பி என்பவரின் வாரிசுகள் என்றால் சரிதான். அன்பழகன் நடராஜனின் வாரிசு என்றாலும், முத்துகுமரன் வீராசாமியின் வாரிசு என்றாலும் சரிதான். வீராசாமி, நடராஜன், பக்கிரிசாமி, சின்னதம்பி ஆகியோர் நான்கு நபர்களுக்கும் தாவா சொத்தில் 4 ல் 1 பாகம் என்றால் சரிதான், ஆனால் குமாரசாமிக்கும் 1 பங்கு உண்டு.

4) தாவா சொத்தின் பரப்பளவு எவ்வளவு என்றால் 5 செண்ட் ஆகும். 5 செண்டை தலைக்கு 1 ¼ செண்டாக பிரிக்க வேண்டும் என்றால் சரிதான். எனது தந்தை 1ம் பிரதிவாதி மற்றும் எனது சித்தப்பா பாலசுப்ரமணியன் ஆகியோருக்கு சேர்த்து 1 ¼ செண்ட் பாகம் என்றால் சரிதான். தாவா சொத்து வாதி வீட்டின் வடபுறம் காம்பவுண்டிற்குள் வருகிறது என்றால் சரியல்ல, காம்பவுண்டிற்கு

வெளியே உள்ளது. தாவா சொத்தை வாதி தோட்டமாக பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல, நான் தான் பயன்படுத்தி வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை, முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபணம் செய்ய ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தைப் பொறுத்து வாதியின் தம்பி மோகன் வாதிக்கு 2 ½ செண்ட் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணமான வா.சா.ஆ.1 யை பொறுத்து நான் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றாலும், அதைப் பொறுத்து பரிகாரம் ஏதும் கேட்கவில்லை என்றாலும் சரியல்ல, வா.சா.ஆ.1 செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளேன்.

5) வா.சா.ஆ.1 ஆவணத்தைப் பற்றி எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிறகு தெரியவந்தது. 16 ஆண்டுகளாக வா.சா.ஆ.1 ஆவணத்தைப் பொறுத்து பரிகாரம் ஏதும் கோராமல், கோரியுள்ளதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது பாகம் என்று கூறும் 1 ¼ செண்ட் சொத்தின் நீள, அகலம் என்ன என்றால் ஞாபகம் இல்லை. அந்த 1 ¼ செண்டில் எனது சித்தப்பா பாலசுப்ரமணியனுக்கு பாதி பாகம் என்றால் சரிதான். எனது பாக அளவின் நீள, அகலமும், எனது சித்தப்பா பாகத்தின் நீள, அகலமும் எனக்கு தெரியாது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 13 மீட்டர் அகலமுள்ள தாவா சொத்தில் 1 ¼ செண்டிற்கு சுமார் 3 மீட்டர் அகலமுடைய சொத்தில் எங்கள் பாக அளவு சுமார் 1.5 மீட்டர் அளவுடைய சொத்தை தனியாக அனுபவம் செய்யமுடியாது என்றால் சரிதான், 3 மீட்டரையும் நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். 3 மீட்டர் அகலத்திற்கும், நீளத்திற்கும் தனியாக அத்து உள்ளதா என்றால் அத்து உள்ளது. எனது 1.5 மீட்டர் நிலத்திற்கு என்ன வகையான அத்து வைத்துள்ளேன் என்றால் 3 மீட்டருக்கும் சேர்த்து தான் முள் வேலியை அத்தாக வைத்துள்ளேன். அத்து எதனடிப்படையில் அமைத்தேன் என்றால் அளந்து பார்த்து அமைத்தேன். அளந்து பார்த்திருந்தால் அதன் நீள, அகலம் என்ன என்றால் பல காலங்களுக்கு முன்பு அளந்தது, ஞாபகம் இல்லை. அளப்பதற்கு முன்பு வாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. பாகம் பிரியவில்லை என்று நான் கூறியுள்ள நிலையில் எங்கள் சொத்திற்கு எவ்வாறு அத்து

வைத்தேன் என்றால் தாவா சொத்தை 20 ஆண்டுகளுக்கு முன்பே நான்காக பிரித்து எங்கள் பங்கு இது தான் என்று பிரித்துக் காட்டினார்கள் நான் வேலி போட்டேன். நான் கூறுவதை போல் வேலி அத்து உள்ளது என்பதை காண்பிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வேலி அத்தின்படி தனிப்பட்டா இல்லை என்றால் சரியல்ல, எனது தந்தை மற்றும் சித்தப்பா பெயரில் பட்டா உள்ளது. **சாட்சி தற்போது அந்த பட்டா கூட்டு பட்டாவாக உள்ளது என்றும் அந்த கூட்டுப் பட்டாவில் குமாராசாமி, சுப்ரமணியன், முத்துகுமாரன், ராமசந்திரன், பாலசுப்ரமணியன், பக்கிரிசாமி ஆகியோர் பெயரில் உள்ளது என்று மாற்றி கூறுகிறார்.** நான் தற்போது கூறிய கூட்டுப்பட்டாதாரர்களில் முத்துகுமரனை தவிர மற்றவர்கள் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். இறந்து போனவர்கள் சொத்தினை அனுபவிக்க முடியாது என்றால் சரிதான். இறந்து போனவர்களின் வாரிசுகளின் பெயர் எதுவும் நான் கூறிய பட்டாவில் இல்லை என்றால் சரிதான்.

6) தாவா சொத்து சர்வே எண்ணில் ராமையன் மகன் சீனிவாசன் என்பவர் பெயர் உள்ளதா என்றால் உள்ளது, அவர் கிரையம் பெற்றுள்ளார். அவர் பெற்ற கிரையத்தின்படி காம்பவுண்ட் சுவர் அமைத்துள்ளார் என்றால் சரிதான். குமாரசாமி பெயர் பட்டாவில் இல்லை என்றால் சரிதான். சீனிவாசன் பெற்ற கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர் வாங்கிய கிரைய சொத்தின் நீள, அகலம், பரப்பளவு என்ன என்றால் ஞாபகம் இல்லை. சீனிவாசன் சரியாக காம்பவுண்ட் போட்டுள்ளாரா அல்லது பிறர் இடத்தையும் சேர்த்து காம்பவுண்ட் போட்டுள்ளாரா என்றால் அவர் இடத்தில் மட்டும் தான் போட்டுள்ளார்.

7) எனது சித்தப்பா பாகத்தையும் நான் அனுபவம் செய்து வருகிறேனா அல்லது எனது சித்தப்பாவின் வாரிசுகள் அனுபவம் செய்து வருகிறார்களா என்பதை எனது சித்தப்பாவின் வாரிசுகளை கேட்டால் தெரியும் என்றால் சரிதான். 14.04.1992 பாக ஒப்பந்தத்தின்படி எனது தந்தை மற்றும் நான் கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 08.04.2024 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் நானும் எனது தந்தையும்

எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான், அந்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.04.1992 பாக ஒப்பந்தத்தின்படி தான் நான் நாகமுத்து என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் கிரையம் கொடுத்தது உண்மை தான் ஆனால் அந்த கிரையம் பாக ஒப்பந்தத்தின் படி கொடுக்கப்பட்டது அல்ல. நாகமுத்து பெற்ற கிரைய ஆவணத்தை பார்த்தால் எதனடிப்படையில் கிரையம் கொடுக்கப்பட்டது என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான்.

8) என்னிடம் காட்டப்படும் 14.04.1992 தேதிய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய தந்தையுடையதா என்றால் இல்லை.

**( குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/ரா.ராஜசேகர்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.